வெளியிடப்பட்டுள்ளது. அதற்கான இடம் தேர்வு செய்யும் பணி நிறைவு பெற்றவுடன் விரைவாக உசிலம்பட்டி தொகுதியில், உசிலம்பட்டி போக்குவரத்துப் பகுதி அலுவலகம் திறப்பதற்கு துறை சார்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 83, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

83—

கால்நடை மருந்தகம்

*__49928__—**திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெய்வேலி தொகுதி, பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம், காடாம்புலியூரிலுள்ள கால்நடைக் கிளை நிலையத்தை கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நெய்வேலி தொகுதி, காடாம்புலியூர் கால்நடைக் கிளை நிலையத்தை கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தித் தர வேண்டுமென கேட்டிருக்கிறார். ஒரு கால்நடைக் கிளை நிலையத்தை, கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்த வேண்டுமென்று சொன்னால், அங்கு 5,000 கால்நடை அலகுகள் இருக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற அந்தக் கிளை நிலையத்தில் 5,000 கால்நடைகள் இல்லாத காரணத்தினால், கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்த

2015 மார்ச் 30]

சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தங்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன்.

திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈகைக்கும், வாகைக்கும் இலக்கணமே! ஈடில்லா வெற்றிகளின் இருப்பிடமே! எனக்கென ஏதுமில்லை, எல்லாமும் மக்களுக்கே! (மேசையைத் தட்டும் ஒலி) என்று ஏழையரைத் தாங்கி நிற்கும், இறை தந்த கொடையாம் மாண்புமிகு அம்மா அவர்களின் பாதம் பணிந்து வணங்குகிறேன். பின்தங்கிய மக்கள் அதிகம் உள்ள, தானே புயலால் பாதிக்கப்பட்ட தொகுதி நெய்வேலி ஆகும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், எதிர்வருகின்ற காலத்தில் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடத்தில் எடுத்துச்சொல்லி, காடாம்புலியூர் பகுதியில் உள்ள கால்நடைக் கிளை நிலையத்தை, கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்துவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காடாம்புலியூர் கிராமத்திற்கு அருகிலுள்ள பத்திரக்கோட்டை மற்றும் மருங்கூர் ஆகிய இடங்களில் கால்நடை மருந்தகங்கள் செயல்பட்டு வருகின்றன. எனவே, வருங்காலத்தில் காடாம்புலியூரில் 5,000-க்கு மேலாக கால்நடைகள் உயரும்போது, இங்கே மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களுடைய அரசு கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்த தகுந்த நடவடிக்கைகளை எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 84, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.